பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 17 புதன்கிழமை 02.12.2020 கதிர் 257

# இலங்கையை நெருங்கியது 'புரவி' வடக்கு, கிழக்குக்கு அதிக ஆபத்து

## பல இடங்களில் மக்கள் இடம்பெயர்வு





**(ந.லோகதயாளன்)**

**வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு பகுதியில் உருவான தாழமுக்கம் சூறாவளியாக வலுவடைந்து, தற்போது திருகோணமலைக்கு தென் கிழக்காக 330 கிலோமீற்றர் தூரத்தில் நிலைகொண்டுள்ளது என வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2

## வடக்கில் இரு நாள்களுக்கு பாடசாலைகள் மூடப்படும்!



வடக்கு மாகாணத்தில் நாளை வியாழக் கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் பாடசாலைகள் மூடப்படும் என்று மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் அறிவித் துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2

## பொன்னாலை கடற்பரப்பில் மீனவரைக் காணவில்லை!



யாழ்ப்பாணம், பொன்னாலைக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் காணாமல் போயுள்ளார்.

சுழிபுரம், பெரியபுலோவைச் சேர்ந்த செல்வராசா செல்வக்குமார் (வயது 37) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே நேற்றி ரவு 8 மணியளவில் காணாமல்போயுள் ளார்.

2

## கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட யாழ். மாநகர சபை 'பட்ஜட்' தோல்வி

### முன்னணி, ஈ.பி.டி.பி. கூட்டாக எதிர்ப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் இன்று 5 மேலதிக வாக்குக ளால் தோல்வியடைந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக் குட்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் இன்று சபையின் மேயர் இம்மானுவேல் ஆனல்ட்டினால் சமர்ப்பிக்கப்பட்டது.

2

## வீதியில் மரம் முறிந்து விழுந்ததில் 30 நிமிடங்கள் போக்குவரத்து தடை

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளி யவளையில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தண்ணீரூற்று - நெடுங்கேணி பிர தான வீதியில் களிக்காட்டுப் பகுதியில் வீதிக்கு குறுக்காக மரம் ஒன்று சரிந்து விழுந்துள்ளது.

இதனால் குறித்த வீதி ஊடான போக்குவரத்து இன்று சுமார்

2



## மஹர கலவர சகல உண்மைகளையும் நாடாளுமன்றில் அம்பலப்படுத்துவோம்

### நீதி அமைச்சர் அலி சப்ரி திட்டவட்டம்



மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் கவலையடைகின்றோம். அந்தச் சம்பவம் தொடர்பான அனைத்து உண்மைத் தகவல்களும் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

- இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

2

## பலியான 11 கைதிகளில் 9 பேருக்குக் 'கொரோனா'

மஹர சிறைச்சாலை வன்முறையில் உயிரிழந்த 11 கைதிகளில் 9 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது என ராகம வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ல்டென் பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன் காயமடைந்துள்ள கைதிகளுள் 40 இற்கும் மேற்பட்டோருக்கு வைரஸ் தொற் றியுள்ளது எனவும் தகவல் வெளியிடப்பட் டுள்ளது.

அதேவேளை, மஹர சிறைச்சாலை கல வரம் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள நிலையில், உள்ளக விசாரணைகளும் ஆரம்பமாகியுள் ளன என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித் துள்ளனர்.

## சிறைக்கும் கைதிகளுக்கும் புதிய இராஜாங்க அமைச்சர்



சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற் றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்தே நியமிக் கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இன்று முற் பகல் அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண் டார்.

குறித்த பதவியில் இருந்த சுதர்னி பெர்னாண் டோபுள்ளே, சுகாதார சேவைகள்,

2

## தமிழ் இந்து மக்களின் மத உரிமைகளை இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டும்!

### தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டு அறிக்கை



**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

தமிழ் இந்து மக்களின் மிக முக்கிய பண்டிகைகளில் ஒன்றான கார்த்திகைத் தீப விளக்கீட்டினை இரா ணுவமும் பொலிஸும் இணைந்து குழப்பியதற்கு எதிராகவும், அரசு இது குறித்து எத்தகைய நடவடிக்கை யையும் மேற்கொள்ளாத தைக் கண்டித்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளான இலங் கைத் தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடு தலை இயக்கம், தமிழீழ மக் கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி, தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழ்த்

2

## புதிய அரசமைப்பு வரைவு உருவாக்கம்: தமிழ்க் கட்சிகளால் ஐவரடங்கிய குழு!

புதிய அரசமைப்பு வரைவை உருவாக்க ஐந்து பேர் கொண்ட குழு, தமிழ்த் தேசியக் கட்சிகளால் அமைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான சிபாரிசுகளை இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி அரசு கேட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்று ஒன்றுகூடி விவாதித்தன.

இதன்போது, தமிழ்த் தேசியக் கட்சிகள் சார்பில் சிபாரிசு வரைவொன்றை சம ர்ப்பிப்பது என முடிவாகியுள்ளது.

கடந்த அரசமைப்பு உருவாக்க முயற்சியின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த வரைவு, கடந்த அரசில் தமிழ் மக்கள் பேரவை சமர்ப்பித்த வரைவு, அத்துடன், வடக்கு மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு ஆகியவற்றின் உள்ளடங்கங்களி

2

## மஹர கலவர சகல உண்மைகளையும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தலை வருமாறு:-

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஐவரங்கிய குழுவினர் தமது பணிகளை முன்னெடுப்பார்கள். ஒரு மாதத்துக்குள் முழுமையான விசாரணை அறிக்கையையும், ஒரு வாரத்துக்குள் இடைக்கால அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளேன்.

அத்துடன், மேற்படி சம்பவம் தொடர்பில் சி.ஐ.டியினரும் தனியாக விசாரணை நடத்துவார்கள். இதற்கான பணிப்புரையை பொலிஸ்மா அதிபர் விடுத்துள்ளார்.

இப்படியொரு சம்பவம் நடந்திருக்க கூடாது என்பதுதான் அனைவரினதும் எதிர்ப்பார்ப்பு. அரசு என்ற வகையில் எமது கவலையை வெளியிடுகின்றோம். பின்னணி தொடர்பில் முழுமையாக ஆராயந்த பின்னர் தகவல்கள் முன்வைக்கப்படும். இதற்காகச் சிறிது காலம் வழங்குமாறு கோருகின்றேன். - என்றார்.

## புதிய அரசமைப்பு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேம்பட்ட புதிய வரைவை உருவாக்குவது எனவும் முடிவானது.

இந்த வரைவை உருவாக்க ஐந்து பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டது. மாவை சேனாதிராஜா தலைமையில் சீ.வீ.கே.சிவஞானம், சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், பேராசிரியர் வி.சிவநாதன் ஆகியோர் அரசமைப்பு வரைவை உருவாக்கும் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், எதிர்வரும் 10 நாள்களில் இந்தக் குழு வரைவை இறுதி செய்து, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகளுக்குச் சமர்ப்பிப்பது எனவும் முடிவாகியுள்ளது.

கட்சித் தலைவர்களின் அங்கீகாரத்தின் பின்னர், அந்த வரைவை மாவை சேனாதிராஜா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சி.வி.விக்னேஸ்வரன் தரப்பில் நிபுணர்களை வைத்து ஓர் அரசமைப்பு வரைவை உருவாக்கி வருவதாக அவரது பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது. இந்த வரைவையும் உள்ளடக்கியதாக, புதிய வரைவைத் தயாரிப்பது எனவும் முடிவாகியுள்ளது.

## சிறைக்கும் கைதி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்றுநோய் மற்றும் கொரோனாத் தடுப்பு இராஜாங்க அமைச்சராக நேற்று முன்தினம் மாற்றப்பட்டிருந்தார்.

இதேவேளை, இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் இராஜாங்க அமைச்சராகவும் லொஹான் ரத்வத்தே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீதியில் மரம் முறிந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரை மணி நேரமாக தடைப்பட்டிருந்தது

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்ற நிலையில் காற்றும் வீசி வருகின்றது. இந்தநிலையில் குறித்த வீதியோரத்தில் நின்ற பாரிய மரமொன்று வீதிக்கு குறுக்காக சரிந்து விழுந்ததில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது

இதனைத் தொடர்ந்து அந்த வீதியால் வந்த வாகனச் சாரதிகள் மற்றும் இராணுவத்தினர் இணைந்து குறித்த மரத்தை அகற்றினர். அரை மணி நேரத்தின் பின்னர் வீதியினூடாக போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

## சிறைக்கும் கைதி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது வரவு - செலவுத்திட்டம் மீது இர கசிய வாக்கெடுப்பு வேண்டும் என ஒரு தரப்பினரும், பகிரங்க வாக்கெடுப்பு வேண்டும் என இன்னொரு தரப்பினரும் கோரினர். இதையடுத்து இரகசிய வாக்கெடுப்பா? பகிரங்க வாக்கெடுப்பா? என்பது தொடர்பில் மதீர்மானிக்க வாக்கெடுப்பு நடத்தப்பட்ட்து.

அதில் இரகசிய வாக்கெடுப்புக்கு 19 வாக்குகளும், பகிரங்க வாக்கெடுப்புக்கு 24 வாக்குகளும் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் சபையின் செயலாளர் சீராளன் பகிரங்க வாக்கெடுப்பை நடத்தினார்.

அதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலா ஓர் உறுப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினருமாக மொத்தம் 19 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

அதேவேளை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.), தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் அனைவருடனும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் இணைந்து கூட்டாக 24 பேர் எதிராக வாக்களித்தனர். இதனால் 24 இற்கு 19 என்ற வகையில் வரவு - செலவுத்திட்டம் தோல்வியடைந்தது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் மொத்தம் 45 உறுப்பினர்கள் உள்ள நிலையில் இன்றைய அமர்வில் 43 உறுப்பினர்கள் பங்கேற்றனர். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'புரவி' என்ற பெயர் கொண்ட இந்தச் சூறாவளி மேலும் வலுவடைந்து, இன்று மாலை அல்லது இரவு வேளையில் மட்டக்களப்புக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் கரையைக் கடந்து இலங்கையை ஊடறுத்துச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 75 கிலோ மீற்றர் முதல் 85 கிலோ மீற்றர் வரை வீசலாம் என வளிமண்டலவில் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

கடல் பிராந்தியங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்வதால் மறு அறிவித்தல் வரை கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

**வடக்கில்**

வடக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக இங்குள்ள சகல மாவட்டங்களிலும் தற்போது பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.

வடக்கின் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி என்பன இதுவரை பாதிப்புக்களை அதிகம் சந்தித்துள்ளதோடு வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் தற்போது தாக்கம் காணப்படுகின்றது.

முல்லைத்தீவில் வீதியில் பாரிய மரம் ஒன்று முறிந்தமையால் போக்குவரத்து தடைப்பட்டது. கடற்கரையை அண்டிய பகுதிகளில் இருந்த 450 குடும்பங்கள் முன் ஆயத்தமாக நகர்த்தப்பட்டு 3 பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடும் மழை காரணமாக முல்லைத்தீவு நகருக்குள் பிரவேசிக்கும் அனைத்து வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுகின்றது.

இதில் வட்டுவாகல் பாலம், செல்வபுரம் பகுதியிலான வீதிகள் இந்த நிலைமை காணப்படுகின்றபோதும் கேப்பாப்பிலவு - முல்லைத்தீவு வீதியே தற்போது தப்பியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரு வீடுகளின் மீது மரங்கள் முறிந்து வீழ்ந்தமையால் அந்த வீடுகள் சேதமடைந்துள்ளன. இதனால் அந்த வீடுகளில் வசித்த இரு குடும்பங்கள் இடப்பெயர்வைச் சந்தித்துள்ளனர்.

இதேபோன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிக மழை பெய்கின்றமையால் தாழ்நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் பல குடும்பங்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன. அதேவேளை, பொன்னாலைக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் காணாமல்போயுள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் மடுப் பிரதேச செயலாளர் பிரிவில் இரு பாரிய மரங்கள் வீதியின் குறுக்கே வீழ்ந்தமையால் பிரதேச செயலாளர் பயணித்த வாகனம் உட்பட பலர் வீதியில் நீண்ட நேரம் பரிதவிக்கும் நிலைமை ஏற்பட்டது.

**கிழக்கில்**

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மாகாண ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் அவசர நிலைமைகளின் போது செயற்படக் கூடியவகையில் மாவட்ட செயலாளர் பிரிவுகளிலுள்ள அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களின்போது பாதிக்கப்படும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லல், மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக உரிய பொறுப்பான நிறுவனங்கள் மற்றும் தொண்டர் அமைக்களை தயார் நிலையில் வைத்திருப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறித்த சூறாவளியானது கடற்பரப்பிலிருந்து நிலப்பரப்பை நோக்கி நகரும் போது நீர் நிலப்பரப்பை நோக்கி வரும் வாய்ப்புக்கள் உள்ளன எனவும், அத்தகைய சந்தர்ப்பங்களில் சுனாமி ஏற்படுதாக எண்ணி மகள் அச்சமடையத் தேவை இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொன்னாலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச மக்களும் தொழிலாளர்களும் இணைந்து இவரைத் தேடும் பணியில் இன்று ஈடுபட்டுள்ளனர். கடற்படையின் உதவி கோரப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர், பொன்னாலை வட்டார உறுப்பினர் மற்றும் பொன்னலை கிராம சேவையாளர் ஆகியோரும் இன்று காலை சென்றிருந்தனர்.

## வடக்கில் இரு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் கொரோனா அச்சுறுத்தலால் ஏற்கனவே மூடப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டப்பாடசாலைகளுக்கு இரண்டு நாள்கள் விடுமுறை நாளை தொடக்கம் விடப்படுகின்றது.

மாவட்ட செயலாளர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநரால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## தமிழ் இந்து மக்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பசுமை இயக்கம் ஆகிய கட்சிகளின் சார்பில் மாவை சோ. சேனாதிராஜா கையெழுத்திட்டு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டு அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

தமிழ் மக்கள் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள். அவர்களுக்கு மிகவும் தொன்மையான மொழி, மத, கலாசார பண்பாடுகள் உண்டு. பாரம்பரியமாகவே மத அனுஷ்டானங்களையும், கலாசார பண்பாடுகளையும் மிக இறுக்கமாகப் பின்பற்றி வரும் ஒரு இனமாகவே தமிழ்த் தேசிய இனம் இலங்கை மண்ணில் வாழ்ந்து வருகின்றது. அவர்களது கலாசாரப் பண்பாடுகளைப் பற்றிப் பிடிப்பதற்காகவும் அவற்றை யாரும் அழித்துவிடக்கூடாது

(07ஆம் பக்கம் பார்க்க)


# மரண அறிவித்தல்



## திரு கந்தையா பூபாலசிங்கம்

(BSc, LLB Attorney at Law & Forensic Medicine)

ஓய்வு பெற்ற விஞ்ஞான மற்றும் ஆங்கில ஆசிரியர்

- St Mathews College விக்டோரியா கல்லூரி சுழிபுரம்.

சட்டத்தரணி மேல் நீதிமன்றம் கொழும்பு - (Home for Human Rights)

யாழ்ப்பாணம் சங்கானையில் 30.08.1934 அன்று பிறந்து, சண்டிலிப்பாய் மற்றும் கொழும்பு பெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திரு.கந்தையா பூலசிங்கம் அவர்கள் 30.11.2020 அன்று இறைபதம் அனடந்தர்.

இவர் கந்தையா அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், வீரசிங்கம் ஞானம்மா தம்பதிகளின் மருமகனும், தேவராணியின் அன்புக் கணவரும், பிருந்தா (வீரகேசரி,Neelakandan & Neelakandan, C.H.R.D ), பிரதாபன்(கொழும்பு), திலீபன் (இங்கிலாந்து), அனிதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், கனகாம்பிகை, சுப்பிரமணியம் மற்றும் இராஜலட்சுமி, காலஞ்சென்ற ஜெகநாதன், பாலசந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்தோஷ்குமார், சந்திரிகா, சியாமளா,சிவசங்கர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரசாந், பிரதீஷா, பிரவீன், பிரித்வீன், அனீஷா, பிரணவ், விகிர்தன ஆகியோரின் அன்பு பேரனுமார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 03-12-2020 வியாழக்கிழமை காலை 9.00 மணியில் இருந்து கல்கிஸ்சை மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணிக்கு இறுதிக் கிரியைக்காக கல்கிஸ்சை பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு :-**

**தேவராணி + 94774055507**
**பிருந்தா - கொழும்பு +94773458836**
**பிரதாபன் - கொழும்பு + 94777760102 /**
**பிரான்ஸ் + 33751255702**
**திலீபன் - லண்டன் + 447971590966**
**அனிதா - சிட்னி + 61466150541**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விதைத்ததை அறுக்கும் கூட்டமைப்பு

**உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்தே ஆகவேண்டும்.**

**அது போல வினை விதைத்தவன் அதை அறுவடை செய்தேயாக வேண்டும். அது தவிர்க்க முடியாத உலக நியதி.**

**யாழ் மாநகரசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேயர் இமானுவேல் ஆனால்ட் சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்டம் இந்த வருடமும் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது.**

**அதை நோக்கும் போதுதான் இந்த உலக நியதி நினைவுக்கு வருகின்றது.**

**அடுத்த இரு வாரங்களுக்குள் திரும்பவும் ஒரு தடவை வரவு – செலவுத் திட்டத்தை திருத்தங்களுடன் முதல்வர் ஆனால்ட் சமர்ப்பிக்கலாம். அப்போதும் அது திரும்பவும்**

**தோற்கடிக்கப்படுமானால் அவர் பதவி இறங்குவது தவிர்க்க முடியாததாகும்.**

**அத்தகைய சந்தர்ப்பத்தில் திரும்பவும் மேயர் தெரிவுக்கான தேர்தலை சபையில் தமிழ்க் கூட்டமைப்பும் பிற கட்சிகளும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதுதான் நிலைமை.**

**இன்று சபையில் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமையின் பின்னால் சுவாரஸியமான சில நிலைப்பாடுகள் உள்ளன. அவை நோக்கத்தக்கவை.**

**நாற்பத்தியைந்து உறுப்பினர்கள் கொண்ட சபையில் முதல்வர் தமது வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக இருபது பேரின் ஆதரவைக் காட்டுவாராயின் அவரையும் அவரது வரவு – செலவுத் திட்ட அறிக்கையையும் காப்பாற்றுவதற்காக அணி மாறி – தத்தமது கட்சித் தீர்மானங்களுக்கு மாறி – மேற்படி வரவு – செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களிப்பதற்கு மாற்றுக் கட்சிகளில் சிலர் தயாராக இருந்தனர். அத்தகைய நடவடிக்கைக்காக காலக் கிரமத்தில் தமது மாநகரசபை உறுப்பினர் பதவியை அவர்களது கட்சி அவர்களிடமிருந்து பறித்தாலும் அதனை எதிர்கொள்ளவும் அவர்கள் தயாராகவும் இருந்தனர்.**

**ஆனால் முதல்வர் ஆனால்டினால் 19 பேரின் ஆதரவையே திரட்ட முடிந்தது. அவரது வரவு – செலவுத்திட்டம் 19 – 24 என்ற வாக்குக் கணக்கில் தோற்கடிக்கப்பட்டது.**

**இங்குதான் நாம் முன்னர் குறிப்பிட்ட வினை விதைத்த விடயம் வருகின்றது.**

**2015 முதல் 2019 வரை ஆட்சியில் இருந்த நல்லாட்சி அரசுக்கு – குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஆட்சிக்கு – நிபந்தனை ஏதும் விதிக்காமல், கண், மண் பார்க்காமல், கண்ணை மூடிக் கொண்டு ஆதரவு அளித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. உலகில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வைத்துக் கொண்டு ஆளும் தரப்புக்கு நிபந்தனை ஏதுமின்றி ஆதரவளித்த முதல் 'முட்டாள்' தரப்பாகக் கூட்டமைப்புத்தான் இருந்திருக்கும் என நினைக்கிறோம்.**

**அப்படிக் கூட்டமைப்புத் தலைவர்கள் நடந்து கொண்டமைக்கு வெளியே தெரியாமல் உள்ளே புதைந்து கிடக்கும் காரணங்கள் இருக்கக் கூடும். ஆனால் ஐ.தே.கட்சித் தலைவருக்கும் அவரது ஆட்சிக்கும் அக்கட்சியினருக்கும் கூட்டமைப்பினர் நிபந்தனையின்றி வழங்கிய ஆதரவே கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்புக்கு எதிரான மக்கள் கருத்து தீவிரம் பெற்றமைக்கான காரணம் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.**

**ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதன் தலைமைக்கும் அதன் அரசுக்கும் கண்ணை மூடிக்கொண்டு கூட்டமைப்பு வழங்கிய ஆதரவும் கூட்டமைப்பு பொதுத்தேர்தலில் பின்னடைவைச் சந்தித்தமைக்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும்.**

**இப்படி கூட்டமைப்புத் தலைவர்கள் ரணிலுக்கும் அவரது கட்சிக்கும் 'கழுவிக் கொடுத்து'க் கொண்டிருந்தும் கூட, இங்கு ரணிலின் கட்சியினர் மிகப் பொருத்தமான கட்டத்தில் கூட்டமைப்பினரின் காலைவாரி அவர்களை மண்கவ்வ வைத்திருக்கின்றனர்.**

**அதுதான் இன்ற யாழ் மாநகரசபையில் நடநந்து.**

**முக்கிய சந்தர்ப்பத்தில் மாநகரசபையில் அங்கம் வகிக்கும் ஐ.தே கட்சியின் இரு உறுப்பினர்களும் 'மிஸ்ஸிங்'. ஓடி ஒளிந்து விட்டனர். கட்சியின் யாழ் தலைவி மறித்தமையால் தாங்கள் வரவில்லை என்று அவர்கள் தரப்பில் சமாளிப்புப் பதில் கூறப்படுகின்றது.**

**அந்த இருவரும் கூட்டத்துக்கு வந்து, வழமை போல கூட்டமைப்பின் தலைமைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தால் மேலும் இருவரும் கட்சி மாறி கூட்டமைப்புக்கு ஆதரவாக வாக்களித்து, வரவு –செலவு திட்டத்தை வெற்றிபெற வைத்திருப்பார்கள்.**

**பொறுத்த நேரத்தில் ஐ.தே கட்சி காலை வாரியமையால் இவ்வளவு காலமும் அக்கட்சிக்கு ஆதரவாகச் செயற்பட்ட குற்றத்துக்கான பரிசை இப்போது பெற வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியிருக்கின்றது கூட்டமைப்பு.**

**தமது மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஐ.தே கட்சியை விடாப்பிடியாக ஆதரித்து கடைசியாக கூட்டமைப்புத் தலைமை பெற்றுக் கொண்டது வெறும் பூஜ்யம்தான்.**

**மாகாணசபைத் தேர்தல்களை உரியமுறையில் நடத்த முடியாமை உட்படப் பல விடயங்களில் ஐ.தே. கட்சியின் பாவக் குற்றச் சுமைகளை சுமக்கும் கூட்டமைப்பு, அதனோடு சேர்ந்து யாழ் மேயர் பதவியை இழந்த பின்னடைவுச் சுமையையும் சுமக்கப் போகின்றது. அவ்வளவே.**

# கிழக்கில் கொரோனாத் தொற்று எண்ணிக்கை 257 ஆக அதிகரிப்பு!

## மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் லதாகரன் தகவல்



கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 257 ஆக அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) அக்கரைப்பற்று பிரதேசத்தில் 32 பேரும், அட்டாளைச்சேனையில் 06 பேரும், ஆலையடிவேம்பு பகுதியில் ஒருவரும், வாழைச்சேனை பகுதியில் 04 பேரும் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொதுச்சந்தையுடனும், பேலியகொட மீன்சந்தையுடனும் தொடர்புபட்டவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பு கொண்டவர்களே அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 138 பேர் கொரேனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளமையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 92 பேரும் அம்பாறை சுகாதார பிரிவில் 11 பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 16 பேரும் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொதுச்சந்தையுடன் தொடர்புபட்ட 109 பேர் இதுவரையில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் மாகாண பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் அக்கரைப்பற்று பொதுச்சந்தையுடன் தொடர்புபட்டவர்கள் தொடர்பான தகவல்களை பொதுசுகாதார பிரிவினருக்கு வழங்குமாறும் கொழும்பு உள்ளிட்ட பிற இடங்களில் இருந்து வருகைதருவோர் தொடர்பிலும் பொதுமக்கள் விழிப்பாக இருந்து சுகாதார மற்றும் பாதுகாப்புத் துறையினருக்குத் தகவல்களை வழங்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வைத்தியசாலையிலும் கைதிகள் மோதல்; 30 பேர் சிறை வைத்தியசாலைக்கு மாற்றம்

றாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த கைதிகளில் 30 பேர், சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையின்போது, காயமடைந்த கைதிகளே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பலத்த காயங்களுக்குள்ளான நான்கு கைதிகளுக்கு, அதிதீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது என றாகம வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஷெல்டன் பெரேரா தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற கைதிகளுக்கு இடையிலும் நேற்று முன்தினம் சிறு மோதல் ஏற்பட்டுள்ளது.

இதற்கமையவே, 30 கைதிகள் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர் என்று றாகம வைத்தியசாலையின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

மஹர சிறை அமைதியின்மையில் காயமடைந்த ஏனைய கைதிகள் தொடர்ந்தும் றாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# மஹர சிறைச்சாலை வன்முறை தொடர்பில் விசாரணை தீவிரம்

கொழும்பு, டிசெ.02

மஹர சிறைச்சாலையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட மூன்று வகையான மருந்து வில்லைகள் குறித்தும், சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகள் குறித்தும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், மஹர சிறைச்சாலையில் இருந்து 21 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்து வில்லைகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையானது தற்போதைய நிலையில் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், சிறைச்சாலைகளில் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டமைக்கான காரணங்களைக் கண்டறிவதற்கான முழுமையான விசாரணைகள் மேலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் தடுப்பு மருந்து தொடர்பான ஆய்வுகள் இன்று!

இலங்கையில் தயாரிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பு மருந்து தொடர்பில் இன்று (புதன்கிழமை) விரிவான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக ஔடத உற்பத்திகள், வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

கேகாலை பிரதேசத்தில் உள்ள ஆயுர்வேத மருத்துவரால் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் கொரோனாத் தடுப்பு மருந்து தொடர்பாகவே இதன்போது ஆராயப்படவுள்ளது.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், ஜனாதிபதி இது தொடர்பாக விசேட அவதானம் செலுத்தியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். அத்தோடு, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான 50 தொற்றாளர்களுக்கு இந்த மருந்து வழங்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன குறிப்பிட்டுள்ளார்.

# 297 இலங்கையர் நாடு வந்தடைவு!

தொழில் வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்று கொரோனா பரவல் காரணமாக அங்கு சிக்கித் தவித்த மேலும் 297 இலங்கையர்கள் இன்று (புதன்கிழமை) அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி டுபாயிலிருந்து 162 பேரும் மாலைதீவிலிருந்து 44 பேரும் கட்டாரிலிருந்து 21 பேரும் இந்தியாவின் மும்பையிலிருந்து 70 பேரும் இன்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைத்து பயணிகளுக்கும் விமான நிலையத்தில் பல்வேறு தனியார் வைத்தியசாலையின் ஊழியர்களால் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை தொழில்வாய்ப்புக்காக பல்வேறு நாடுகளை நோக்கி இன்றைய தினம் நாட்டிலிருந்து 425 இலங்கையர்கள் புறப்பட்டவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 530 கிலோமீற்றர் தொலையில் மையங்கொண்டுள்ளது புரவி!

வங்கக்கடலில் உருவான புரவி புயல் பாம்பனுக்கு 530 கி.மீ. தொலைவில் நிலை கொண்டுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் –

வங்கக்கடலில் உருவான புரவி புயல் பாம்பனுக்கு 530 கி.மீ. தொலைவில் நிலைகொண்டுள்ளது.

திருகோணமலைக்கு 300 கி.மீ. கன்னியாகுமரிக்கு 700 கி.மீ. தொலைவிலும் மையம் கொண்டுள்ளது. இந்தப் புயல் 6 மணி நேரத்தில் மேலும் வலுவடையும். இன்று மாலை அல்லது இரவில் திருகோணமலை அருகே கரையைக் கடக்கிறது.

கரையை கடந்த பின் புரவி புயல் நகர்ந்து மன்னார் வளைகுடா அருகே நாளை காலை வருகிறது. 12 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வரும் புயல் கரையை கடக்கும்போது 95 கி.மீ. வேகத்தில் காற்று வீச வாய்ப்புள்ளது.

நாளை மறுநாள் அதிகாலை குமரி – பாம்பன் இடையே தென் தமிழக கடற்கரையில் புரவி புயல் கரையைக் கடக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2, 3 ஆம் கட்ட சோதனைகளுக்காக ரஷ்யாவின் மருந்து இந்தியா வருகை!

ரஷ்யாவின் கொரோனா தடுப்பூசியான ஸ்பூட்னிக் – வி, 2 மற்றும் 3 ஆம் கட்ட கிளினிகல் சோதனைகளுக்காக கடந்த வாரம் இந்தியா வந்தடைந்தது.

இந்தியாவில் டாக்டர் ரெட்டீஸ் லேபும், ரஷ்யாவின் நேரடி முதலீட்டு நிதிய அமைப்பும் சேர்ந்து தடுப்பூசியின் கிளினிகல் சோதனைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து உள்ளனர்.

இந்தியாவில் ஐதராபாத்தில் உள்ள ஹெட்டரோ மருந்து நிறுவனம் முதற்கட்டமாக 10 கோடி ஸ்பூட்னிக் – வி தடுப்பூசிகளைத் தயாரிக்கும்.

இந்த தடுப்பூசியின் வர்த்தக ரீதியிலான உற்பத்தியை வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்க உள்ளதாக ரஷ்ய நேரடி முதலீட்டு நிதிய அமைப்பு தெரிவித்துள்ளது. இந்தியாவுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த தடுப்பூசி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தடுப்பூசி 95.5 சதவிகிதம் பலனளிக்க கூடியது என்றும் 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் தடுப்பூசிக்கு கோரிக்கை வழங்கியுள்ளன எனவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 03.12.2020 | வியாழக்கிழமை |
| --- | --- |
| 04.00 - 04.55 | தரம் - 12 பொருளியல் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 பொருளியல் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 கணக்கீடு (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 தமிழ் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 08 வரலாறு (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 தமிழ் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 09 வரலாறு (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 விஞ்ஞானம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 விஞ்ஞானம் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 இணைந்த கணிதம் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 இணைந்த கணிதம் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 தமிழ் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 07 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 வணிகக்கல்வி (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 வணிகக்கல்வி (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 கணக்கீடு (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 சிங்களம் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 06 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 விவசாய விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 விவசாய விஞ்ஞானம் (த) |

# விவசாயிகள் பிரச்சினை: கனடா பிரதமர் கருத்துக்கு

## இந்தியா கடும் கண்டனம்



வேளாண் சட்டமூலங்களுக்கு எதிராக விவசாயிகள் இன்று (புதன்கிழமை) ஏழாவது நாளாக போராட்டம் நடத்தி வருகின்ற நிலையில், இது தொடர்பாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தெரிவித்துள்ள கருத்துக்கு இந்தியா கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அனுராக் ஸ்ரீவஸ்தவா –

இந்தியாவில் விவசாயிகள் நடத்திவரும் போராட்டம் தொடர்பாக முழுமையான தகவல்களைத் தெரிந்து கொள்ளாமல் கனடாவைச் சேர்ந்த தலைவர்கள் கருத்து தெரிவிக்கின்றமையைக் காண்கிறோம்.

ஒரு ஜனநாயக நாட்டின் உள்விவகாரங்கள் தொடர்பாக இதுபோன்ற கருத்துகள் தேவையற்றவை. இராஜாங்க ரீதியான பேச்சுகள் அரசியல் காரணங்களுக்காக தவறாக சித்திரிக்கப்படாமல் இருப்பது சிறந்தது. – எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாயிகளின் போராட்டம் தொடர்பாக ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிக்கையில் –

விவசாயிகள் நடத்திவரும் போராட்டம் தொடர்பாக இந்தியாவிலிருந்து வெளிவரும் செய்திகளை அங்கீகரிக்காவிட்டால் நான் பொறுப்பற்றவனாகி விடுவேன்.

அங்கு நிலவும் நிலைமை கவலைக்குரியது. விவசாயிகளின் குடும்பத்தினர், நண்பர்கள் பற்றி நாம் அனைவரும் கவலைப்படுகிறோம். அமைதியான போராட்டத்தின் உரிமையைப் பாதுகாக்க கனடா எப்போதும் துணை நிற்கும்.– எனத் தெரிவித்துள்ளார்.

# உ.பியில் தரித்து நின்ற கார் மீது மணல் லொறி சரிந்து வீழ்ந்தது!

## 8 பேர் உயிரிழப்பு

உத்தர பிரதேச மாநிலத்தில் நின்று கொண்டிருந்த கார் மீது மணல் லொறி சரிந்து விழுந்த விபத்தில் பெண்கள் உள்ளிட்ட 8 பேர் பலியாகினர்.

திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு 10 பேருடன் வந்த மஹிந்திரா ஸ்கார்பியோ கார், கவுசாம்பியில் இன்று அதிகாலை 3.30 மணியளவில் நின்று கொண்டிருந்தது.

அப்போது அவ்வழியே வந்த லொறி திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்து, சாய்ந்து



கார் மீது விழுந்தது. இதில் கார் ஓட்டுநர், காரிலிருந்த பெண்கள் உள்ளிட்ட 8 பேர் உயிரிழந்தனர். விபத்துக்கு டயர் வெடித்து லொறி கட்டுப்பாட்டை இழந்து சாய்ந்ததே காரணமாகக் கூறப்படுகிறது.

## இந்தியாவின் குடியரசு தின நிகழ்வுக்கு பிரித்தானிய பிரதமர் சிறப்பு விருந்தினர்!



அடுத்த ஆண்டு நடக்கவுள்ள குடியரசு தின விழா கொண்டாட்டங்களில், பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ஆண்டு தோறும் ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறும் குடியரசு தின விழா அணிவகுப்பு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர் பங்கேற்பது வழக்கம். இதன்படி, அடுத்த மாதம் நடைபெற உள்ள குடியரசு தின விழாவில், பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன், சிறப்பு விருந்தினராக பங்கேற்க இருக்கின்றமையையொட்டி, அதற்கான ஏற்பாடுகளை, மத்திய அரசு தீவிரமாக செய்து வருகிறது.

## பாக். இராணுவம் தாக்கி இந்தியாவின் வீரர் சாவு!



காஷ்மீரில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை வீரர் வீரமரணமடைந்தார்.

பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள தர்கண்டி என்ற இடத்தில் பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதேபோல் ரஜவ்ரி பகுதியிலும் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதில் சக வீரர்களைக் காப்பாற்ற பி.எஸ்.எவ். உதவி ஆய்வாளர் பாட்டின்சாட் கைட் என்ற அதிகாரி தீரத்துடன் சண்டையிட்டு வீரமரணம் அடைந்தார். கொல்லப்பட்ட துணை ஆய்வாளருக்கு பி.எஸ்.எவ் ஐஜி என்.எஸ். ஜாம்வால் அஞ்சலி செலுத்தினார்.






# இராணுவ வீரரைத் தவறாக சித்திரிக்கும் ஒளிப்படம் வெளியிட்ட சீனாவுக்கு ஆஸ்திரேலியா கண்டனம்!

ஆப்கானிஸ்தானை சேர்ந்த ஒரு குழந்தையை ஆஸ்திரேலிய இராணுவ வீரர் கொலை செய்கின்றமை போல சித்திரிக்கும் போலி ஒளிப்படத்தை வெளியிட்ட சீனாவுக்கு ஆஸ்திரேலியா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

முரண்பட்ட இந்த படத்தை வெளியிட்டதற்காக சீனா வெட்கப்பட வேண்டும் என்று ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் கூறியுள்ளார்.

இந்த பதிவை போலியானதாகக் குறிப்பிடும் ஆஸ்திரேலிய அரசாங்கம், அதை டுவிட்டரிலிருந்து நீக்க அந்த நிறுவனத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த இடுகை உண்மையிலேயே பழிவாங்கும் எண்ணத்துடன், முற்றிலும் மூர்க்கத்தனமானதாக உள்ளதாக பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

சீன அரசாங்கம் இந்த இடுகையை பதிவிட்டதற்கு வெட்கப்பட வேண்டும். இது உலகின் பார்வையில் அவர்களைத் தாழ்த்துகிறது. இந்த ஒரு தவறான படம், எங்கள் பாதுகாப்புப் படைகள் மீது மோசமான கறையை படியச் செய்கிறது.

ஒரு ஜனநாயக, தாராளவாத நாட்டிடம் இருந்து எதிர்பார்க்கப்பட்டபடி, தற்போது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போர்க்குற்றங்களை விசாரிக்க ஆஸ்திரேலியா ஒரு வெளிப்படையான செயல்முறையை நிறுவியுள்ளது எனக் கூறினார்.

2009 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் 39 ஆப்கானிய பொதுமக்கள் மற்றும் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் 25 ஆஸ்திரேலிய வீரர்களுக்குத் தொடர்புள்ளதாக நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன என இந்த



மாதத்தின் ஆரம்பத்தில் ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படை அறிக்கையொன்றை வெளியிட்டது.

இந்த விசாரணை பரவலான கண்டனத்துக்கு வித்திட்டத்தை அடுத்து, இந்த விவகாரம் தொடர்பான விசாரணையை ஆஸ்திரேலிய பொலிஸ்துறை கையிலெடுத்துள்ளது.

சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லிஜியன் ட்சௌ, ஒரு புனையப்பட்ட படத்தை டுவிட்டரில் வெளியிட்டார். அதில் ஆஸ்திரேலிய இராணுவ வீரரொருவர் குழந்தையொன்றின் கழுத்தில் இரத்தக்களரியுடன் கத்தியை வைத்திருப்பதைப் போன்று சித்திரிக்கப்பட்டுள்ளது. அந்த குழந்தை தனது கைகளால் ஆட்டுக்குட்டி ஒன்றை இறுக்கப்பிடித்திருப்பதையும் அந்த படத்தில் காண முடியும்.

ஆஸ்திரேலிய இராணுவ வீரர்கள் சிலர் 14 வயதான இரண்டு ஆப்கானிஸ்தான் சிறுவர்களைக் கத்தியைக் கொண்டு கொன்றனர் என வெளியான குற்றச்சாட்டை குறிக்கும் வகையில் இந்த புகைப்படத்தை சீனா வெளியிட்டதாகக் கூறப்படுகிறது.

# 6 வாரங்களாக எரியும் காட்டுத் தீயை கட்டுப்படுத்த தீயணைப்புத்துறை தீவிரம்!

## பிரேசர் தீவில் சம்பவம்

ஆஸ்திரேலியாவின் பிரேசர் தீவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்புத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

உலகின் மிகப்பெரிய மணல் தீவான பிரேசர் தீவில் கடந்த 6 வாரங்களுக்கு முன்பு காட்டுத்தீ ஏற்பட்டது. இதனை கட்டுக்குள் கொண்டுவர விமானங்கள் மூலம் தண்ணீரை பீய்ச்சியடிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், தற்போது வரை சுமார் ஒரு லட்சத்து 87 ஆயிரம் ஏக்கர் வனப்பகுதிகளுக்கு தீ பரவியுள்ளதாகவும் இதனால் தீவை விட்டு சுற்றுலாப்பயணிகளை வெளியேற்றும் சூழல் உருவாகியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# உலகில் மனிதாபிமான உதவி தேவைப்படுவோர் எண்ணிக்கை கொரோனாவால் உச்சம் தொட்டது!

## ஐ.நா. அதிர்ச்சித் தகவல்

கொரோனா வைரஸ் தொற்றுநோய், மனிதாபிமான உதவி தேவைப்படுபவர்களின் எண்ணிக்கையை உச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, 2021ஆம் ஆண்டில் 33 பேரில் ஒருவருக்கு உணவு, நீர் மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவி தேவைப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டை விட 2021இல் மேலும் 40 வீதம் மனிதாபிமான உதவி தேவைப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளதாக ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குடரெஸ் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவில் 235 மில்லியன் மக்களுக்கு இதுபோன்ற தேவைகள் காணப்படுவதுடன் சிரியா, ஜேர்மன், ஆப்கானிஸ்தான், கொங்கோ ஜனநாயக குடியரசு மற்றும் எதியோப்பியாவில் இந்தத் தொகை அதிகமாக இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உலகளாவிய தொற்றுநோயின் தாக்கம் தொடர்ந்து மோசமடைந்து வருவதால் மனிதாபிமான உதவித் திட்டங்கள் கடுமையான குறைபாடுகளை எதிர்கொண்டுள்ளன என அன்டோனியோ குடரஸ் தெரிவித்துள்ளார்.

1990 களுக்குப் பின்னர் முதன்முறையாக, தீவிர வறுமை அதிகரிப்பு, ஆயுட்காலம் குறைவு, எச்.ஐ.வி, காசநோய் மற்றும் மலேரியாவால் ஆண்டுதோறும் இறப்பு எண்ணிக்கை இரட்டிப்பாகும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், பட்டினியை எதிர்கொள்ளும் மக்களின் எண்ணிக்கையும் இரட்டிப் பாகும் என அஞ்சுவதாக ஐ.நா. பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# பல்லாயிரம் பேரின் மலேரியா இறப்புக்களுக்கு கொரோனா வைரஸ் சீர்குலைவு வழிவகுக்கும்!



கொரோனா தொற்றுநோயால் மலேரியா சிகிச்சையில் ஏற்படும் இடையூறு காரணமாக பல்லாயிரக்கணக்கான மரணங்கள் ஏற்படக்கூடும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

சிகிச்சையின் அணுகலை 50 வீதமாக குறைப்பதன் மூலம் உலகின் பெரும் பகுதிகளில் ஒழிக்கப்பட்ட ஒரு நோயால் மேலதிகமாக ஒரு லட்சம் இறப்புகளுக்க வழிவகுக்கும் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

2000 ஆம் ஆண்டிலிருந்து அதிர்ச்சிதரும் அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அந்த நேரத்தில் 10 நாடுகள் இந்த நோயை முற்றாக கட்டுப்படுத்தின எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இருப்பினும் ஒவ்வோர் ஆண்டும் நோயாளிகளின் எண்ணிக்கையில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்றும் இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து மலேரியா சிகிச்சையில் கொரோனா தொற்று விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை ஆபிரிக்காவில் இந்த பிரச்சினை தீவிரமாக உள்ளது எனத் தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு, 90 வீதத்துக்கும் அதிகமான நோயாளிகள் அந்தக் கண்டத்தில் அடையாளம் காணப்படுகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

# 26 பெண்களை கொலைசெய்த சந்தேகம்: வோல்கா பிராந்தியத்தில் ஒருவர் கைது!

வோல்கா பிராந்தியத்தில் 26 பெண்களைக் கொன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் டடர்ஸ்தானில் ஒருவரைக் கைது செய்துள்ளதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

'வோல்கா வெறி' என அழைக்கப்படும் இந்தச் சம்பவத்தில் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுக்கு இடையில் ரஷ்யாவின் மத்திய, வோல்கா மற்றும் யூரல் மாவட்டங்களில் 26 பெண்கள் கொல்லப்பட்டனர்.

பல வருடங்களாக விசாரணைகள் இடம்பெற்ற நிலையில் 38 வயதான ஒருவரைக் கைது செய்துள்ளனர் எனவும் அவர் தனது குற்றங்களை ஒப்புக்கொண்டுள்ளார் எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த ஆண்டுகளில் குறிப்பாகக் கடுமையான குற்றங்களைச் செய்தனர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் டடர்ஸ்தானில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார் என விசாரணைக் குழு தெரிவித்தது.

தடயவியல் ஆராய்ச்சி மற்றும் உயிரியல் பொருள்கள் பகுப்பாய்வு மற்றும் சம்பவத்தின் பிற இடங்களில் காணப்பட்ட குற்றங்களின் பிற தடயங்களின் அடிப்படையில், அனைத்து செயல்களும் ஒரு நபரால் செய்யப்பட்டவை என்பது நிறுவப்பட்டது.

இந்நிலையில் தற்போது கைது செய்யப்பட்டுள்ள நபர் 2009 இல் திருட்டு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டார் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# ஜப்பானின் அருகிலே உள்ள தீவில் ஏவுகணை தடுப்பை நிறுவியது ரஷ்யா!



ஜப்பானுக்கு அருகில் உள்ள சர்ச்சைக்குரிய தீவில் ரஷ்யா தனது ஏவுகணை தடுப்பு அமைப்பை நிறுவியுள்ளது.

ஜப்பானுக்கு மிக அருகில் உள்ள இதுருப் என்ற தீவில் வான்வழித் தாக்குதல்களை எதிர்கொள்ள வடிவமைக்கப்பட்ட புதிய எஸ் – 300 வி 4 ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை நிறுவியுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகத்தின் ஸ்வெஸ்டா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் தீவில் ஏற்கனவே விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருக்கும் நிலையிலும் தற்போது ஏவுகணை தடுப்பு அமைப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ரஷ்யாவின் இந்த நடவடிக்கைக்கு ஜப்பான் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை



மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1986.03.08
மதம் - இந்து K+K குருகுலம்
நட்சத்திரம் - அவிட்டம் 2
செவ் - -------
பாவம் - 24
கல்வி - பட்டதாரி
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண், வேறு எதிர்பார்ப்பு இல்லை.

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1980.10.02
மதம் - RC வேதம் K+K குருகுலம்
நட்சத்திரம் - -------
பாவம் - -------
செவ் - --------
கல்வி - A/L
தொழில் - ---------
எதிர்பார்ப்பு - வெளிநாட்டு தேவை அல்லது உத்தியோகம்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்ப படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# புரெவிப் புயலினால் நேர்ந்த அனர்த்தங்கள்

கிளிநொச்சி...





மட்டக்களப்பு...




முல்லைத்தீவு....





மன்னார்.....





பரந்தன் குமாரபுரம்.....





காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சிறைச்சாலை மோதல் தொடர்பாக ஆராய மேலுமொரு குழு நியமனம்!

மஹர சிறைச்சாலை மோதல் தொடர்பான விசாரணைக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் 12 அதிகாரிகள் உள்ளடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவால் இந்தக் குழு நியமிக்கப்பட்டதாக, அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மஹர சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 104 பேர் காயமடைந்து றாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ஏற்கனவே நீதியமைச்சாலும் குழு ஒன்று அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில்குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் குழுவொன்றும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மஹர சிறைச்சாலை பதற்ற நிலை தொடர்பான விசாரணைக்காக நீதியமைச்சால் நியமிக்கப்பட்ட குழுவில் இருந்து பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண விலகியமையை அடுத்து, அந்த இடத்துக்கு பொலிஸ் அத்தியட்சகர் லலிந்தரண வீர நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் தமிழ்க் கிராம காணிகளை சிலர் அபகரிப்பதாகக் குற்றச்சாட்டு!







மன்னார் இரணை இலுப்பைக்குளம் பூசாரிகுளம் பகுதியில் தமிழ் மக்களின் கிராமங்களுக்குள் சிலர் அத்துமீறிக் காணிகளைப் பிடிக்கின்றனர் எனத் தெரிவித்து நேற்று (செவ்வாய்க்கிழமை) அந்தப் பகுதியில் மக்கள் குழுமியிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

அந்தக் காணி விடயம் தொடர்பாக வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்று வருவதால் வழக்கு விசாரணை வழக்கு முடிவுறும் வரை முஸ்லிம் மக்களை அத்துமீறி அந்தப் பகுதிகளுக்குள் செல்லவேண்டாம் என நீதிமன்றத்தால் தீர்ப்பு வழுங்கப்பட்டுள்ளது எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதன்படி, சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனை கைதிகளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் நீதிமன்றத்தின் தடையுத்தரவையும் மீறி முஸ்லிம் மக்கள் அத்துமீறி தமிழ் மக்களின் காணிகளைத் துப்புரவு செய்து தென்னங்கன்றுகளை நட்டுள்ளனர் என மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்தில் 45 குடும்பங்கள் வசித்து வருகின்றன எனவும் உப குடும்பங்கள் 15 குடும்பங்கள் காணியற்ற நிலையில் வசித்து வரும் நிலையில் இவ்வாறு அத்து மீறி காணிகளைப் பிடிக்கின்றமை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மக்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில் அந்தப் பகுதிக்கு வருகை தந்த கிராம உத்தியோகத்தர் மற்றும் மன்னார் மாவட்ட மடு பொலிஸாரும் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் காட்டுப் பகுதியில் சுமார் 20 ஏக்கர் காணி துப்புரவு செய்யப்பட்டு தென்னங்கன்றுகள் நடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இரு தரப்பினரையும் இன்று மடு பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தமிழ் இந்து மக்களின் ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதற்காகவும் தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்தும் போராடி வருகின்றது. அவற்றைத் தட்டிப்பறிக்க முனைபவர்களுக்கு எதிராக விட்டுக்கொடுப்பின்றித் தொடர்ந்தும் போராடி வருகின்றார்கள்.

தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளுக்காகப் போராடி மரணித்துப் போனவர்களைத் தமிழ் மக்கள் அஞ்சலிக்கக்கூடாது என்பதற்காக, அரசு பொய்யான தவறான வழிகாட்டுதல்களை நீதிமன்றங்களுக்கு வழுங்கி, தமக்காக மரணித்துப் போனவர்களுக்கு அஞ்சலிப்பதற்குத் தடையினைப் பெற்றிருந்தார்கள். அதை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற தமிழ் இந்து மக்களின் பாரம்பரிய மத அனுஷ்டானமான கார்த்திகை விளக்கீட்டினை இராணுவமும் பொலிஸாரும் இணைந்து பல இடங்களில் மிக அநாகரிகமான முறையில், அந்த மக்களின் மத நம்பிக்கைகளையும் கடவுள் நம்பிக்கையையும் அவமதிக்கும் வகையில் அதனைத் தடுத்து, அச்சுறுத்தி அவர்களை அடக்க முயற்சித்தார்கள்.

இலங்கையில் இருக்கக்கூடிய மக்கள், தாம்தாம் விரும்பிய மதங்களைப் பின்பற்றுவதற்கும், அதனை அனுஷ்டிப்பதற்கும் கடைப்பிடிப்பதற்கும் அரசியல் சாசன ரீதியாக சகல உரித்தும் உடையவர்கள். ஆனால், கடந்த 29ஆம் திகதி இந்து மக்களின் கார்த்திகை விளக்கீட்டின்போது புதுக்குடியிருப்பு, பரந்தன், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணத்தின் வடமராட்சி, வலிகாமம் போன்ற பல பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் வீடுகளுக்குள் சென்றும், இந்து ஆலயங்களுக்குள் அத்துமீறி நுழைந்தும், அவர்கள் பக்தியோடு ஏற்றிய தீபங்களை சப்பாத்துக் கால்களால் எட்டி உதைத்து அவர்களது அனுஷ்டானங்களை அவமதித்ததுடன், சில பெரியோர்கள் தாக்கப்பட்டும் இருக்கின்றார்கள். கோவில் அர்ச்சகர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கின்றார்கள். கார்த்திகைத் தீபமேற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்து மக்களின் மிக முக்கிய மத அனுஷ்டானமான கார்த்திகை விளக்கீட்டினை இலங்கை அரசின் பொலிஸாரும் இராணுவத்தினரும் திட்டமிட்ட வகையில் ஆயுத முனையில் குழப்பியிருக்கிறார்கள். கார்த்திகை விளக்கீடு என்பது இந்து மக்களின் மிக முக்கியமான அனுஷ்டான நாள் என்பதும், காலாதிகாலமாக அதனை அவர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள் என்பதும், இலங்கை அரசுக்கும் பொலிஸாருக்கும் படையினருக்கும் தெரிந்த விடயம்.

உண்மைநிலை அப்படியிருக்க, அதனை அச்சுறுத்தித் தடை செய்ய முயற்சிப்பது என்பது தமிழ் மக்களின் மத வழிபாட்டுரிமையைப் பறித்தெடுப்பதாகும். அரசின் திட்டமிட்ட இந்தச் செயற்பாடானது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

தம்மை ஒரு ஜனநாயக அரசு எனக் கூறிக்கொள்ளக் கூடியவர்கள் இன்னுமொரு தேசிய இனத்தின் மத உரிமையை அச்சுறுத்திப் பறிப்பதென்பதும் தடை செய்வதென்பதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும். படையினரதும், பொலிஸாரினதும் இந்தத் திட்டமிட்ட செயற்பாட்டுக்கு அரசு மன்னிப்புக் கோரவேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறாது என்னும் உத்தரவாதம் வழுங்கப்படவேண்டும்.

அரசு தமிழ் மக்களுடைய மொழி, மத, நில உரிமைகளைத் தொடர்ச்சியாகப் புறக்கணிக்குமாக இருந்தால், தமிழ் மக்களைத் தொடர்ச்சியான ஓர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசே வழிசமைக்கின்றது என்று பொருள்படும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் இந்தக் கோரிக்கைகளுக்கு இசைவாக அரசு உடனடியாக தனது மன்னிப்பைக் கோரவேண்டும் என்றும் அல்லது குறைந்தபட்சம் நடந்து முடிந்த சம்பவங்களுக்குத் தனது வருத்தத்தை யாவது தெரிவிக்க வேண்டும் என்றும் அரசியல் சாசனத்தில் வழுங்கப்பட்டுள்ள மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை மற்றும் வழிபாட்டுரிமைக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம் – என்றுள்ளது.

# மரண அறிவித்தல்



## திருமதி. சண்முகவடிவம்பாள் சண்முகம்

நீர்கொழும்பு திரு. சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமார், சாந்தகுமார், பிரேம்குமார், ஜெயசித்ரா ஆகியோரின் அருமைத் தாயாரும், இந்திரன், ஜெயந்தி, சுபாஷினி, சாதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், முருகபூபதி, பரிமளஜெயந்தி, நித்தியானந்தன், ரீதரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும்,

நவரட்ணம், மாலதி, ஜெயா, சோபிதா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயானா, ஜெயமிதா, ரஷிகா ஆகியோரின் அருமைப்பேத்தியாருமான திருமதி செல்வி சண்முகவடிவம்பாள் சண்முகம் நேற்று 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (01-12-2020) இலங்கை, நீர்கொழும்பில் காலமானார்.

அன்னாருக்கான இறுதி அஞ்சலி நீர்கொழும்பு அலஸ்வீதி இல்லத்தில் இன்று 02ஆம் திகதி ( 02-12-2020) நடைபெற்று, அதனையடுத்து நீர்கொழும்பு பொது மயானத்தில் மாலை 4.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**முருகபூபதி 00 61 4 166 25 766**
**letchumananmgmail.com**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.12.2020 இல் வெளியிடப்பெற்றது.